செயல்திட்டச் சுருக்கம்

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள எண்ணூர் உப்பங்கழியில் சுற்றுச்சூழலும் மற்றும் மீன்பிடி வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதைக் குறித்து, ஓய்வுபெற்ற நீதிபதி டி. ஹரிபரந்தாமன் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஒரு மூன்று உறுப்பினர் கொண்ட குழு விசாரணை மேற்கொண்டது. மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெவலப்மன்ட் ஸ்டடீஸ் அமைப்பின் ஓய்வுபெற்ற பேராசிரியர் எஸ். ஜானகிராமன் மற்றும் பேராசிரியர் கேரென் கோயெல்ஹோ ஆகியோர் இவருக்கு இதில் உதவினர். இந்தக் குழுவினர் கள ஆய்வு மேற்கொண்டு எண்ணூர் உப்பங்கழிக்குச் சென்று அங்குள்ள உள்ளூர் மக்கள் மற்றும் பிற பயனாளர்களிடம் அவர்கள் தரப்புக் கருத்தைக் கேட்டுப்பெற்றனர்.

எண்ணூர் கிரீக் பகுதியைச் சுற்றிலும் – மணலி மற்றும் திருவற்றியூர் தொழிற்சாலைப் பகுதிகள், வட சென்னை அனல் மின் நிலையம் (என்.சி.டி.பி.எஸ்.), வல்லூரில் உள்ள என்.டி.இ.சி.எல். அனல் மின் நிலையம், எண்ணூர் அனல் மின் நிலையம் (இ.டி.பி.எஸ்.), காமராஜ் போர்ட் லிமிடட், (கே.பி.எல்.) மற்றும் காட்டுப்பள்ளியில் உள்ள எல் & டி போர்ட் (தற்போது அதானி) பல தொழிற்சாலை நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன. காட்டுப் பள்ளியிலும் தற்போது நிலக்கரிச் சாம்பல் கொட்டப்படும் இடமான என்.சி.டி.பி.எஸ்.ஸிலும் மேலும் அனல் மின்நிலையங்கள் நிறுவுவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

உப்பங்கழியைச் சுற்றித் தற்போது அமைந்துள்ள தொழிற்சாலைகளின் பல்வேறு சட்ட விரோத மற்றும் விதிமீறல்கள் குறித்து இந்த அறிக்கை படம் பிடித்துக்காட்டுகிறது. சட்டரீதியாக இந்த தொழிற்சாலைகள் பின்பற்ற வேண்டிய சுற்றுச்சூழல் விதிமுறைகளை இவை முறையாகப் பின்பற்றுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டிய முறைப்படுத்தும் அமைப்புகள் மீதான குற்றச்சாட்டுகளையும் இந்த அறிக்கை ஆய்வு செய்கிறது. விதி மீறல் உள்ளிட்ட முறைகேடுகளால், இந்த உப்பங்கழியை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவக் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளும் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்த உப்பங்கழியின் நீர்வளத்தையும் சுற்றுச்சூழல் வளத்தையும் சீரழிக்கும் பல்வேறு தொழிற்சாலைகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள கே.பி.எல்., என்.சி.டி.பி.எஸ்., இ.டி.பி.எஸ். மற்றும் என்.டி.இ.சி.எல். நிறுவனத்திற்கு சொந்தமான வள்ளூர் அனல் மின் நிலையத்தின் முறைகேடுகளை இந்தக் குழு குறிப்பாக ஆராய்ந்துள்ளது.

எண்ணூர் உப்பங்கழிப் பகுதியில் படகில் பயணம் செய்த பின்னர் மீனவர்களிடம் கருத்து கேட்கும் கூட்டம் ஒரு கூடத்தில் நடைபெற்றது. அப்போது மீனவ சமுதாயத்தினர் விதிமீறல்களைச் சுட்டிக்காட்டித் தங்கள் வாழ்வாதாரம் உடல்நலம் எப்படி எல்லாம் பாதிக்கப்படுகின்றன என்பதை எடுத்துரைத்தனர். வெள்ள அபாயம் பற்றியும் பல்லுயிர் வளம் பாதிக்கப்படுவது பற்றியும் அவர்கள் விவரித்தனர்.

உப்பங்கழிப் பகுதியில் படகில் சுற்றிவந்தபோது, இந்தக் குழு அறிந்துகொண்ட விஷயங்கள்: அ) வட சென்னை அனல் மின் நிலையம் (என்.சி.டி.பி.எஸ்.), தமிழக அரசு நிர்வகிக்கும் அரசுக்குச் சொந்தமான TANGEDCO நிறுவனம் சூடான திரவக் கழிவை உப்பங்கழியின் முகத்துவாரத்தில் வெளியிடுவது கண்டறியப்பட்டுள்ளது. சூடான நீர் அந்தப் பகுதிக்கு வரும் மீனவர்களுக்கும் அங்கு உள்ள மீன்பிடி தொழிலுக்கும் ஆபத்து மிகுந்தவை என்று மீனவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். காரணம், அதிகமாக சூடான நீர் வெளியேறும் பகுதி ஆபத்தான பகுதியாக மாற்றப்பட்டுள்ளது.

ஆ) என்.சி.டி.பி.எஸ்.ஸிலிருந்து ஏராளமாக நிலக்கரி சாம்பல் சேகரிப்பு குளத்தின் நீர் வாடிகால் வழியாக எண்ணூர் உப்பங்கழியில் வந்து சேர்வதைப் பார்க்க முடிந்தது. அங்கு ஏராளமாக நிலக்கரிச் சாம்பல் குவிந்து கிடப்பதால், அது நதியின் ஆழத்தை 14 அடியிலிருந்து 1 அல்லது 2 அடியாக குறைத்துவிட்டது. இதனால் வாய்க்காலில் படகு மூலம் அங்குச் செல்வது மிகவும் கடினமாக இருந்தது. நிலக்கரிச் சாம்பல் குவியல் தண்ணீர் மட்டத்திற்கு மேல் ஆங்காங்கே காணப்படுகிறது. இந்தக் குழுவினருடன் வந்திருந்த மீனவத் தலைவர்கள் கூற்றுப்படி என்.டி.இ.சி.எல். வள்ளூர் அனல் மின் நிலையமும்கூட இதே மாதிரியான நிலக்கரி சாம்பல் கழிவுகளை இந்த உப்பங்கழியில் கொட்டுகிறது. அதுவும் இதே மாதிரியான விளைவையே ஏற்படுத்தியுள்ளது.

இ) அனல் மின்நிலயத்திலிருந்து நீர்த்தேக்கக் குளத்தில், துருப்பிடித்த பைப்லைன்களின் வழியாக கசியும் நச்சுத்தன்மை வாய்ந்த நிலக்கரிச் சாம்பல் குழம்பு நதியில் வந்து கொட்டி கான்க்ரீட் போன்ற தளத்தை உருவாக்கியுள்ளதால் அங்கு வெளிப்படையான எந்த விதமான உயிரி செயல்பாடுகளும் இல்லாமல் காணப்படுகிறது.

ஈ) மினி-ரத்னா பொதுத்துறை நிறுவனமான, காமராஜ் போர்ட் லிமிடட், மணல் மற்றும் கடலிலிருந்து தூர்வாரப்பட்ட பொருள்களை ஒரு புதிய நிலப்பகுதியை உருவாக்க எண்ணூர் உப்பங்கழியில் வந்து கொட்டியுள்ளது. இந்தச் செயல்பாடுகளின்போது காயல்கள், அலைஓட்டம் மிக்க சேற்று நிலங்கள், சதுப்பு நிலங்கள் மற்றும் இயற்கை வடிகால்கள் அழிக்கப்பட்டுவிட்டன. இந்தச் சட்டவிரோதமான நடவடிக்கையை மீனவர்கள் எதிர்த்த காரணத்தால் இந்த நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அலை ஓட்டம் அதிகமாக உள்ள நீர்நிலைகளின் நிலத்தை மீண்டும் மீட்டெடுக்கும் செயல் சி.ஆர்.இசட். அறிவிக்கையின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது.

உ) அத்திப்பட்டு கிராம வரையறைக்குள் உள்ள உப்பங்கழிப் பகுதியில், காமராஜ் போர்ட் நிறுவனம் தூர்வாரிய மண்ணை அலைஏற்ற ஈரநிலப் பகுதியிலும், உப்பங்கழிப் பகுதியிலும் கொட்டியுள்ளது. இதன் மூலம் மிகப் பெரிய நிலக்கரி மற்றும் இரும்புத் தாது சேமிப்புக் கிடங்கை உருவாக்கியுள்ளது. இந்த இடத்தில் இப்போது தனியார் நிறுவனங்கள் செயல்படுகின்றன. இவ்வாறு உப்பங்கழிகள் மற்றும் அலைஏற்ற நீர் நிலைகளில் உள்ள மறுஉரிமை கோரல் 2011-ம் ஆண்டின் சி.ஆர்.இசட். அறிவிக்கையின் கீழ் தடைசெய்யப்பட்டுள்ளது. கொட்டப்படும் மண்ணிலிருக்கும் நுண்மணல் கசிந்து மீதமுள்ள நதிப் பகுதியில் கலந்து நதியைச் சேறாக்கி அதன் ஆழத்தைக் குறைப்பதோடு வெள்ள நீரைக் கொண்டுசெல்லும் திறனையும் குறைக்கிறது.

ஊ) காமராஜ் போர்ட் லிமிடட் உப்பங்கழி பகுதியில் போர்ட் முதல் நிலக்கரி சேமிப்புக் கிடங்குவரை மிகப் பெரிய வரப்பைக் கட்டியுள்ளது. ஏறக்குறைய 1 கி.மீ. அகலமுள்ள நதி, அந்தப் பகுதிவரை 30 மீட்டர்களுக்கும் கீழ் குறைக்கப்பட்டுவிட்டது. அந்த இடைவெளியும்கூட மிக அதிக அளவில் சேறு நிறைந்து காணப்படுகிறது என்றும் குறைந்த அலையேற்றக் காலகட்டங்களில் இதன் குறுக்கே ஆற்றுப்பயணம் மேற்கொள்ள முடியாதபடி இருப்பதாகவும் இங்குள்ள மீனவர்கள் கூறுகின்றனர். இந்தக் கட்டுமானமே விதிமீறலாகத் தென்படுகிறது என்றும் அலை ஏற்ற இறக்கங்கள் அதிகமாக உள்ள நீர்நிலைகளின் நீர் ஓட்டத்தைத் தடுக்கும் வகையில் இருப்பதால் இப்படிப்பட்டக் கட்டுமானங்கள் 2011-ம் ஆண்டின் சி.ஆர்.இசட். அறிவிக்கையின் கீழ் அனுமதிக்கக்கூடாதவை.

எ) என்.டி.இ.சி.எல்.லின் ஓவர்ஹெட் நிலக்கரி கன்வேயல் பெல்ட் நதியைக் கடக்கும் இடத்தில் பக்கிங்காம் கால்வாயின் ஒரு பகுதி, பெரிய பெரிய மண் மற்றும் நிலக்கரி சாம்பல் குவியல்களுக்குக் கீழ் காணாமல் போய்விட்டது கண்டறியப்பட்டுள்ளது.

ஏ) ஏராளமான கட்டுமானங்கள் - ரயில்வே பாலங்கள், சாலைகளில் உள்ள பாலங்கள் மற்றும் கன்வேயர் பெல்ட்டுகள் - நதியின் பல இடங்களில் குறுக்கும் நெடுக்குமாக காணப்படுகின்றன. இப்படிப்பட்ட 10 கட்டுமானங்கள் இங்கு உள்ளதாக மீனவர்கள் கூறுகின்றனர். இவை ஒவ்வொன்றும் தூண்களின் மேல் கட்டப்பட்டுள்ளன. இந்தக் கட்டுமானங்களைக் கட்டிய அமைப்புகள் கட்டுமான வேலைகள் முடிந்த பிறகு தூண்களுக்கு இடையே கிடந்த சிதைவுகளை அகற்றவில்லை. குவிந்து கிடக்கும் சிதைவுகள் நதி நீரோட்டத்தை திசைதிருப்பியதுடன் ஆபத்தான ஆற்று கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளன. ஆற்றுவழி போக்குவரத்துக்கும் தடையை உண்டாக்கியிருக்கின்றன.

ஐ) பக்கிங்காம் கால்வாய், காட்டுக்குப்பத்தில் நதியுடன் கலக்கிறது. அந்த இடத்தில் துர்நாற்றமான எண்ணெய் பிசுபிசுப்பான கருப்பு திரவம் நிரம்பியுள்ளது. மணலி தொழிற்சாலைப் பகுதியிலிருந்து வெளியேறும் பிசுபிசுப்பான கழிவுகளும் திருவற்றியூர், கத்திவாக்கம் ஆகிய நகராட்சிப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும் திடக்கழிவுகளும் கழிவு நீரும்தான் இதற்குக் காரணம் என மீனவர்கள் இந்தக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

ஒ) சாலை வழியாகவும், படகு மூலமாகவும் சென்றபோது எண்ணூர் அனல் மின் நிலைய புகைபோக்கியிலிருந்து வெளியேறும் அடர்த்தியான புகையைக் காணமுடிந்தது. என்.டி.இ.சி.எல்., கிரஷரிலிருந்து வெளியேறுவதாகக் கூறப்படும் நிலக்கரி தூசு மிகப் பெரிய மேகத்தை உருவாக்குகிறது. அது காற்றில் அடித்துச் செல்லப்பட்டதையும் காண நேர்ந்தது. என்.சி.டி.பி.எஸ்., மற்றும் என்.டி.இ.சி.எல். ஆகிய புகைபோக்கியிலிருந்து வெளியேறும் இந்தப் புகை அடர்த்தியாக இல்லாவிட்டாலும் அதைக் கண்ணால் காண முடிந்தது.

தூய்மையான தண்ணீர், ஈரநிலம், சதுப்புநிலம், உப்பங்கழிகள், மடவைகள், இறால்கள், நண்டுகள் நிறைந்திருந்த ஆழமான கால்வாய்கள் சூழ்ந்திருந்த இந்த நதி இப்போது, குறுகிவரும் குட்டையாக மாறிவிட்டது. மீன்பிடிப்பு குறைந்துவருவதாகப் புகார் கூறும் மீனவர்கள், வாடிக்கையாளர்கள் இவற்றின் சுவை ஏற்க முடியாத வகையில் இருப்பதாகவும் மீன்கள் மாசுபட்டுள்ளதாகக் கவலைகொள்வதாகவும் கூறுவதால், பிடிக்கும் மீன்களுக்குக்கூட சந்தையில் டிமான்ட் குறைந்து வருவதாகவும் இவர்கள் கூறுகிறார்கள். மீன் பிடிப்பதற்காகத் தண்ணீரில் இறங்குபவர்களுக்கும் தோல் வியாதிகள் அதிகமாக உண்டாகின்றன. அனல் மின் நிலையங்கள் பகுதியில் காற்று மாசுபட்டிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் புகார் கூறியுள்ளனர்.

இந்தக் குழுவினர் பார்த்தவை, கேட்டவற்றின் அடிப்படையில் பின்வரும் விஷயங்களை அறிந்துகொண்டுள்ளனர்:

அ) விதிமீறல்கள் நடைபெறுவதையும் இயற்கைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களுக்கும் ஊறு விளைவிப்பதையும் தடுத்துச் சட்டத்தை அமல்படுத்த வேண்டிய பொறுப்பிலும் உள்ள மாநில, மத்திய அரசுகளின் அமைப்புகளால்தான் பெரும்பாலான விதிமீறல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆ) அனல் மின் நிலையங்களான என்.சி.டி.பி.எஸ்., மற்றும் என்.டி.இ.சி.எல். நிறுவனங்கள் கொட்டும் நிலக்கரி சாம்பல்கள், காமராஜ் போர்ட் நிறுவனம் கொட்டும் தூர்வாரிய மண், பல்வேறு அமைப்புகள் கட்டியுள்ள பல்வேறு பாலங்களின் தூண்களுக்கு இடையே உள்ள கட்டுமானச் சிதைவுகள் அகற்றப்படாமல் இருப்பது ஆகியவை நதிகளின் வெள்ள நீரை அடித்துச் செல்லும் ஆற்றலைப் பெருமளவில் குறைத்துள்ளது. மேலும், என்.சி.டி.பி.எஸ்., மற்றும் என்.டி.இ.சி.எல்.களின் நிலக்கரிச் சாம்பல் கழிவுகளும் கிழக்கு நோக்கிப் பாயும் தண்ணீர் மற்றும் கொசஸ்தலை ஆற்றின் கிளைநதிகளின் தண்ணீர் பாயும் வேகத்தைத் தடுக்கிறது. இதனால் இந்த அமைப்புகளைச் சுற்றிலும் வெள்ளம் ஏற்படும் நிலை உண்டாகிறது. அத்திப்பட்டு, எர்ணாவூர், எண்ணூர் ஆகிய இடங்களில் வெள்ளம் ஏற்படுவதற்கு இந்த அமைப்புகளின் பொறுப்பற்ற செயல்கள்தான் காரணம் எனக் கூறலாம்.

இ) இந்த அப்பட்டமான, நேரடியான விதிமீறல்கள் சட்ட அமல்படுத்தல்கள் ஒட்டுமொத்தமாக இல்லை என்பதையே சுட்டிக்காட்டுகின்றன. மாவட்ட நிர்வாகம், பொதுப்பணித் துறை, மாநில கடலோர மண்டல மேலாண்மை ஆணையம், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் மற்றும் காவல்துறை ஆகிய சில முக்கிய அமைப்புகள் செயல்படாமல் உள்ளன.

ஈ) குறைந்துவரும் மீன்களின் எண்ணிக்கை, மோசடைந்துவரும் மீன்களின் தரம், வர்த்தக ரீதியாக மதிப்பு வாய்ந்த உயிரினங்கள் அருகி வருதல், மாசடைந்த தண்ணீரில் சென்று வருவதால் ஏற்படும் உடல்நலப் பிரச்சினைகள் ஆகியவற்றால் கிராம மக்கள், குறிப்பாக மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்தக் குழுவின் பரிந்துரைகள்:

அ) உப்பங்கழிக்கு அருகில் இருக்கும் அனைத்து மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் செயல்பாடுகளையும் மேற்பார்வையிட ஒரு விரிவான ஆய்வு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். நீர்நிலைகளில் இவற்றின் கழிவுகள் வெளியேற்றப்படுவது

நிறுத்தப்படுவதை உறுதிசெய்யப்பட வேண்டும். மேலும் இந்த நிறுவனங்கள் இயங்கும் சுற்றுச்சூழல் நிலவரங்களின் அனைத்து விதிமீறல்களுக்காகவும் கடுமையான, முன்தேதியிடப்பட்ட அபராதங்கள் விதிக்கப்பட வேண்டும்.

ஆ) தொழிற்சாலைகளின் விரிவாக்கத்திற்கு வரையறை விதிக்கப்பட வேண்டும். மாசு உண்டாக்கும் தொழிற்சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள் (புதிய அல்லது விரிவாக்கத்தின் மூலம்) மேலும் அனுமதிக்கப்படக் கூடாது. இந்தப் பகுதிகளில் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த முழுமையான, விரிவான, ஒட்டுமொத்தமான மதிப்பீட்டு ஆய்வு நடத்தப்பட்ட வேண்டும். அதுவரை எந்த திட்டத்தையும் கொண்டுவரக்கூடாது.

இ) என்.சி.டி.பி.எஸ்., மற்றும் என்.டி.இ.சி.எல்., மற்றும் காமராஜ் துறைமுகத்திற்குப் பல்வேறு சட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் உரிமங்களுக்கான விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது தெள்ளத் தெளிவாக இருப்பதால், இந்த நிறுவனங்களின் விரிவாக்கம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஈ) எண்ணூர் உப்பங்கழியின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள தற்போதைய அனைத்துக் கட்டுமானங்களையும், குறிப்பாக, சி.ஆர்.இசட். அறிவிக்கை மற்றும் நீர்நிலைகள், நதிகள் தொடர்பான உரிய சட்டங்களின் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டும். இதன் அடிப்படையில் விதி மீறல்கள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

உ) சுவர்கள், நிரப்பப்பட்டுள்ள குப்பைகள், நீரோட்டத்தை முடக்கும் தடைகள், நீர்நிலைகள் மீதான ஆக்ரமிப்புகள் ஆகிய அனைத்தும் அகற்றப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். மாசடைந்துள்ள நீர்நிலைகளைத் தூய்மைப்படுத்துவதற்கான மாற்று நடவடிக்கைகளை ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைக்க வேண்டும். நதிகளை மாசுபடுத்துவோரை நதி மீட்பு செயல்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மாநில கடற்கரை மண்டல நிர்வாக ஆணையமும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமும் ஈடுபட வேண்டும். அப்போதுதான் வெள்ள நீர் தடையின்றி பாய்வதற்கும் கடல்வாழ் உயிரினங்களை பாதுகாப்பதற்கும் வழிபிறக்கும்.

ஊ) நதி முகத்துவாரத்தில் படிந்துள்ள வண்டல்களைத் தூர்வாரி அகற்றி நதியின் ஆழத்தை மீட்க வேண்டும். சீரழிக்கப்பட்டுள்ள சதுப்பு நிலத்தை மீட்டு நீர் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

எ) நதிநீர் அசுத்தமானதால், ஆரோக்கியமும் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ள கிராம மக்களுக்கும் நதியைப் பயன்படுத்துவோருக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.

ஏ) உள்ளூர் மக்களின் ஆரோக்கியமும் வாழ்க்கையும் தொழிற்சாலைகளின் மாசு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து தேசியத் தொற்று நோயியல் அமைப்பு போன்ற தலைசிறந்த நிறுவனங்கள் மூலம் ஆய்வு செய்ய வேண்டும். உடல் மற்றும் மன நலம் குறித்து விரிவாகவும் முழுமையாகவும் இந்த ஆய்வு நடத்தப்பட வேண்டும். சுற்றுச்சூழல் உடல்நலன் பாதிப்புத் தொடர்பான பிரச்சினைகளைக் கண்டறிவதற்கும், கையாள்வதற்கும் உள்ளூர் மருத்துவ அடிப்படை வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

ஐ) சுற்றுச்சூழல சட்டங்களை மீறுதல், உரிய சட்டங்களின் கீழ் குற்றங்களாகக் கருதப்படுவதால், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், என்.சி.டி.பி.எஸ்., மற்றும் என்.டி.இ.சி.எல்., காமராஜ் போர்ட் மற்றும் இ.டி.பி.எஸ். ஆகிய நிறுவனங்கள், ஆக்ரமிப்பாளர்கள் மீது நம்பகமான கிரிமினல் நடவடிக்கையை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நடவடிக்கைகளால்தான் முறைகேடுகளைத் தடுக்க முடியும்.